வகையிலும் சிறப்பான முறையில் ஏற்பாடுகள் அமைந்த பிறகு கொண்டுவருவது நல்லது என்று கருதுகிறேன். ஆகையால் இப்போது கொண்டுவந்திருக்கும் திருத்தச் சட்டத்தை நிறை வேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(5) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(இ) விதி 21(3)ஐத் தளர்த்தல்.

THE. HON. DR. V. R. NEDUNCHEZHIAN: Sir, I move the following under Rule 21(3) of the Assembly Rules:—

'Item (4) may be taken up as the next item'

The motion was put and carried.

(8) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) 1975 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/75).

THIRU K. M, SUBRAMANIAM: Sir, I have given an amendment.

MR. DEPUTY SPEAKER: First let the Hon. Minister move the Bill.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே

''1975 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/75) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்'' என்று முன்மொழிகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இது ஒரு சாதாரண சின்ன மசோதாவாக இருந்தாலும், இதில் பல்வேறு கருத்துக்களை எல்லாம் சொல்லவேண்டிய அவசியம் இருக்கிறது. காரணம், இது ஏற்கெனவே வந்த சட்டத்தின் மூலம் ஆறு மாத காலத் திற்குத் தேர்தல் இல்லாமல் இருக்க வேண்டும் என்று தெரிவித்து, மேற்கொண்டு ஒரு வருஷம் தேர்தல் வராது என்று சொல்லும் போது அதுபற்றி சில அம்சங்களைச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

* 18-4-1975ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.